TAMIL NADU LEGISLATURE LIBRARY
1 APR 1972
MADRAS

THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

Friday, the 22nd October 1971.

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, MR. CHAIRMAN (THE HON. THIRU C. P. CHITRARASU) in the Chair.

I. QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS

Government Hospital at Madurai

* 11 *Q*.—THIRU S. S. THENNARASU : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there are adequate facilities in the Government Hospital at Madurai to attend immediately to cases of fracture due to accidents; and

(*b*) if so, the details thereof?

மதுரை அரசு மருத்துவமனை

திரு. எஸ். எஸ். தென்னரசு : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) விபத்துக்குள்ளாகி எலும்பு முறிவு ஏற்பட்டு மதுரை அரசு மருத்துவமனைக்கு வருகின்ற நோயாளிகளை உடனே கவனிக்க அம்மருத்துவ மனையில் போதிய வசதிகள் உள்ளனவா ?

(இ) ஆம் என்றால், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) எலும்பு முறிவு விபத்துக்குள்ளாகும் நோயாளிகள் முதலில் அவசர சிகிச்சைப் பகுதியில் கவனிக்கப்படுகின்றனர். இப்பகுதி இரவு பகல் 24 மணி நேரமும் திறந்திருக்கின்றது. அங்கு அவர்கள் கவனிக்கப்பட்டு, அவர்களது பெயர் விவரம் முதலியன பதிவு செய்யப்படுகின்றன. மருத்துவ சட்ட இன விவரங்களும் பதிவு செய்யப்படுகின்றன; அங்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்படுகின்றது. அவர்கள் நடக்கக்கூடிய நிலையில் இருந்தால் மறுநாள் எலும்பு முறிவு மருத்துவப் பிரிவுக்கு வருமாறு கூறப்படுகின்றனர். நடக்க இயலாதவர்கள் முட நீக்கு இயல் பிரிவுகளில் எலும்பு, மூட்டுக் காயங்கள் மட்டும் உள்ளவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். பணியிலுள்ள உதவி அறுவை சிகிச்சை மருத்துவரும் அவரது குழுவும் அன்று அவரைக் கவனித்துக்கொள்கின்றனர். பழையபடி உயிர்ப்பித்தலும், குறிப்பிட்டவாறு அதிர்ச்சி மருத்துவ சிகிச்சை, மற்றும் அவசரச் சிகிச்சைகளுக்கு, வெளியேறும் நீர்ப்பொருளைச் சரிக்கட்டுவதற்கு நீர்ப்பொருள் ஏற்றுதலும் (Replacement of fluid) முதலான காரியங்கள் பொது அறுவை சிகிச்சை மருத்துவர் குழுவால் மேற்கொள்ளப்படுகின்றன.